வேண்டிய உதவித் தொகையை வழங்கிட வேண்டும் என்கிற வகையில் அதிகாரிகளுக்கு அரசு ஆணை பிறப்பித்து ஆவன செய்யுமா? அவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகிற உதவித்தொகையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன உதவித் தொகையினைப் பற்றிக் கேட்கிறார்கள் என்பது தெரியவில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, நான் இரண்டு கேள்விகளை மாண்புமிகு அமைச்சர்முன் வைத்தேன். உடல் ஊனமுற்றோர் வாழ்க்கைத் தரம் உயர குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் அது குறித்து நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்பது ஒரு கேள்வி. அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற உதவித் தொகை அரசின் சார்பில் வழங்கப்படுகின்றது. அது போதுமானதாக இல்லை, அதை உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்பது மற்றொரு கேள்வி.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 45 வயது முடிந்த ஊனமுற்றோருக்கு அரசாங்கத்தால் உதவித் தொகை கொடுக்கப்படுகின்றது. தொழில் பயிற்சி பெறுகின்ற ஊனமுற்றவர்களாக இருந்தால் 150 ரூபாய் உதவித் தொகை கொடுக்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த உதவித் தொகையைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்பது தெரியவில்லை.

மாமுண்டி ஆற்றின் மீது விடத்தினாம்பட்டியில் மேம்பாலம் கட்டும் திட்டம்.

*குறுகிய கால வினா எண். 5—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை நகராட்சி எல்லைக்குள் மணப்பாறை நகரை இரண்டாக்கிச் செல்லும் மாமுண்டி ஆற்றின் மீது விடத்தினாம்பட்டியில் மேம்பாலம் (Over Bridge) கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : மணப்பாறை நகராட்சி இத்திட்டத்தினை மேற்கொள்வதற்காக 1983—84 வரவு-செலவு மதிப்பீட்டில் பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் அந்நகராட்சிக்கு கடன் உதவிக்கான வகை செய்ய அரசு உத்தேசித்துள்ளது.

1983 பிப்ரவரி 12]

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, இந்தத்திட்டத்திற்கான மதிப்பீடு எவ்வளவு? 1983—84 ஆம் ஆண்டிலே மணப்பாறை நகராட்சியில் இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், மணப்பாறை நகராட்சிக்கு நிதி நிலைமை சரியாக இல்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எனவே, அந்தத் திட்டத்தினை மணப்பாறை நகராட்சியால் நிறைவேற்ற முடியாது என்பதும் அமைச்சருக்குத் தெரியும். ஆகவே, அந்தத் திட்டத்தை 1983—84 ஆம் ஆண்டிலே அரசே நேரடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே இந்தத் திட்டத்திற்கு சுமார் 15 லட்சம் ரூபாய் ஆகுமென்று மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கின்றது. மணப்பாறை நகராட்சியைப் பொறுத்தவரையில் போதுமான நிலைமை இல்லை, ஃபைனான்சியலி வீக் என்று சொல்லக்கூடிய நிலைமையின் காரணத்தால்தான் அந்த நகராட்சியைத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டு அதற்காக இந்த ஆண்டு 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. ஆனாலும், இந்த வேலையினை அரசாங்கமே நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் பகுதி இரண்டாம் திட்டத்தின் கீழ் இதனை வழிவகை செய்வதற்கும் அதற்கு வேண்டிய பணம் ஒதுக்குவதற்கும் அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் அமைக்கப்படுவது மிகவும் அவசியம். மணப்பாறை நகராட்சி இப்போது இரண்டாகப் பிளந்து அந்தப் பகுதி ஒரு தீவு போன்று இருக்கிறது. இதன் வழியேதான் மதுரை மாவட்டம், மற்றும் பெரியார் மாவட்டம் ஆகிய இடங்களுக்குச் செல்ல வேண்டி இருக்கின்றது. அப்படிப்பட்ட வழி இன்றைக்கு முடக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நேரடியாக அந்த இடத்திற்குச் சென்று பார்த்திருக்கிறார்கள். மழைக் காலங்களில் மக்கள் அங்கே போக முடியாமலும், அங்கிருந்து வர முடியாமலும் கஷ்டப்படுகிறார்கள். இதை எல்லாம் அரசு கவனத்தில்கொண்டு இந்தத் திட்டத்தினை உறுதியாக 1983—84 ஆம் ஆண்டுத் திட்டத்திலே சேர்த்து இதனை நிறைவேற்ற அதாவது நகராட்சியிடம் ஒப்படைக்காமல் அரசாங்கமே நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் அவற்றை எல்லாம் உத்தேசித்துத்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.